# 6. COLLEGE RULES & REGULATIONS



# college office



**The College office will function from 8.30 a.m. to 4.00 p.m. on all working days.**

# college

| | | |
|---|---|---|
| **UG (B.Com. & B.C.A.)** | **-** | **8.30 a.m. – 2.00 p.m.** |
| **PG (M.Com. – GENERAL)** | **-** | **8.30 a.m. – 1.30 p.m.** |
| **UG (Second Year Students)** | **-** | **TALLY Training** |
| **2.00 p.m. – 3.00 p.m.** | | **(Vocational Rehabilitation Centre – VRC, Guindy)** |
| **UG & PG (Final Year Students)** | **-** | **Job – Oriented Training** |
| **2.00 p.m. – 4.00 p.m.** | | **OPPORTUNITY INFOTECH (Sponsored by FLEX)** |

# college bank

**The Union Bank of India at St. Michael's Academy Branch, Adyar is operating for the benefit of the staff and students of St. Louis. The working time of the bank is from 7.30 a.m. to 12.30 p.m. and on Saturdays from 7.30 a.m. to 10.00 a.m. Students can open an account in their names in the bank and make use of the banking facilities.**

# கல்லூரி அலுவலக நேரம்

அனைத்து வேலை நாட்களிலும் கல்லூரி அலுவலகம் காலை 8.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை செயல்படும்.

# கல்லூரி நேரம்

| | |
|---|---|
| இளங்கலை (பி.காம். & பி.சி.ஏ.) | - காலை 8.30 முதல் மதியம் 2.00 மணி வரை |
| முதுகலை (எம்.காம். – பொது) | - காலை 8.30 முதல் மதியம் 1.30 மணி வரை |
| இளங்கலை (இரண்டாமாண்டு மாணவர்களுக்கு<br>மதியம் 2.00 முதல் மதியம் 3.00 மணி வரை | - கணிணியில் அலுவலகப்பயன்பாடு மற்றும்<br>கணக்குப்பதிவியிலின் நடைமுறைகள்<br>(தொழிற்கல்வி மறுவாழ்வு மையம், கிண்டி) |
| இளங்கலை மற்றும் முதுகலை<br>(இறுதியாண்டு மாணவர்களுக்கு)<br>மதியம் 2.00 முதல் மதியம் 4.00 மணி வரை | - (வேலை வாய்ப்பிற்கான கல்வி – வழங்குபவர்<br>**opportunity infotech** : உதவி : **flex** |

# வங்கி நேரம்

புனித லூயி கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நலனுக்காக யூனியன் வங்கி, புனித மைக்கேல் அகாடமி கிளை, அடையாறில் செயல்பட்டு வருகிறது. வார நாட்களில் வங்கியில் அலுவல் நேரம் காலை 7.30 மணி முதல் 12.30 மணி வரையிலும், சனிக்கிழமைகளில் காலை 7.30 மணி முதல்

10.00 மணி வரையும் செயல்படும். மாணவர்கள் தங்கள் வங்கிக் கணக்குகளை அவ்வங்கியில் ஆரம்பித்து, வங்கி சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் பயன்பெற்றுக் கொள்ளலாம்.

# GENERAL

## COLLEGE REGULATIONS :

### a) CLASS HOURS :

- The Semester consists of 90 working days excluding the semester examination days. Shift – I classes are conducted between 8.30 a.m. and 2.00 p.m.
- The first bell for classes is rung five minutes before the commencement of the class and the second bell at the hour fixed for the commencement of the class. A bell will be rung at the end of each hour. There will be a short prayer service every day at the beginning of the first hour in Shift – I.
- At the first warning bell before each session, students shall go to their respective classes and take their seats so as to be present when the professor enters. Standing around in groups outside the class or in the verandas till the second bell rings should be avoided.
- At the second bell or at the beginning of each hour, if the professor has not come to the class, the representative or someone from the class should enquire from the Head of the Department if the concerned Professor is on leave and get the information from him about the alternative arrangement for their class. The students should not leave the class on their own. Until such information is obtained they should be in class maintaining strict silence.
- Between the class hours, students should not be loitering around the campus. If they need to drink water or to go to the rest room, it should be done quickly; if they have to change rooms, they should move fast.
- When they have no class, the students should go to the library.

### b) ATTENDANCE RULES :

- It shall be the duty of every student to attend classes regularly and punctually.
- When students take short leave (a day or two), they should submit their leave letter either before they take leave or on the day of rejoining.
- Leave letters and late attendance record should be signed by parents or guardians and counter signed by the Class Asst. Professor In-Charge before getting the signature of the Principal. The warden shall sign the leave letters in case of hostel students.

- If a student absents himself/herself without proper information for a period of ten days, he/she is liable to be taken off the rolls.
- A student must attend at least 80% of the working days to be eligible for appearing in the university examinations.



**c) CODE OF CONDUCT :**

- All the students should be in college by 8.20 a.m. If a student comes late regularly to college, he/she will be sent home to bring his / her parents to meet the Principal/Vice Principal and explain the matter. Students coming from far - away places should start early so as to reach the college in time.
- Bringing Mobile Phones, Cigarettes, Narcotic Substances and Alcohol are strictly prohibited. College Campus is a **"Mobile Free Zone"** and **"Tobacco Free Zone".**
- In the class room strict silence should be maintained. When you move from one class room to another, you should be quick and orderly.
- Dress code should be strictly adhered to. All the students are expected to come to the college decently dressed. Men students are prohibited from wearing round necked or other types of T-shirts and Jeans which are not allowed. Men students are not permitted to wear ear rings and wrist bands. They should maintain short hair and be clean shaven. Women students should come wearing chudidhar only.

**d) CERTIFICATES :**

Any student, past or present, wishing to obtain a Transfer or Conduct Certificate, must apply to the College Office in the prescribed form. Certificates will not generally be issued at less than 48 hours notice. No certificate will be posted unless a stamped self-addressed envelope is given together with the application. Those who want the transfer certificate should bring one of their parents.

**e) GOOD MANNERS AND BEHAVIOUR :**

- Every student should conform to the rules and regulations relating to attendance, library, college - fees, examinations and tests, etc. Hostel inmates must obey the hostel regulations. Students are forbidden to smoke in the college / hostel premises, to write or make any marks on the walls or to throw paper or to ink around the floor of the class rooms or verandas or on black boards.
- Students are not allowed to stand or walk along the verandas of the college in groups during the class hours or break times.
- Students are not allowed to eat mid-day meal in classrooms; they must go to the canteen.

- When an Assistant Professor or any other member of the staff enters a class, the students must stand up and not sit down until he invites them to do so or he himself takes the seat. They should likewise stand up when he leaves the class.
  - No student should leave the class room during a lecture; no student should call out any student from the class or talk to any student inside the class without permission from the Assistant Professor.
  - Any difference that may arise among the students, staff and management should be resolved by peaceful methods. Requests, petitions, and complaints of any kind, must be made to the H.O.D. concerned and never directly to higher authorities. The appellate authority is the Secretary of the College.



  - College property and furniture should be handled with care and anyone who damages them will be held liable to pay for the damage caused. Stealing of college property or belongings of others constitutes a serious offence and immediate sanction will be imposed. Lights and fans in the class room must be switched off when there is no need.
  - Students will not be permitted to take away any even broken apparatus from the Laboratory.

**f) DISCIPLINARY REGULATIONS :**
**(Cfr. Tamilnadu Education Rules (1973) Nos. 93 - 98)**

- Students are forbidden to organize or attend any meetings in the College premises, or collect money for any purpose without the explicit permission of the Principal.
- No student who has been convicted of any offence in a criminal court will be allowed to continue his studies in the College.
- Students should abstain from active participation in party or communal politics.
- Students who indulge in political propaganda or who organize fellow students into political factions in the premises of the College or Hostels, or who otherwise engage themselves in party politics are liable to be expelled from the College and Hostels.
- Under the educational rules of the Tamilnadu Government(1978) the Principal has full power to inflict the following punishment; fine, withhold term certificate, suspension and expulsion from the college, if any student is guilty of rudeness of behaviour and gross breach of conduct rules.
- Students should not indulge in any activity leading to the disruption of peace and discipline and dislocation of normal work in the College and Hostel premises. Those who are guilty of violation of this rule will be severely dealt with.
- Ragging of any kind is strictly forbidden; anyone who is guilty of ragging will be summarily and severely punished.
- Use of tobacco in any form is dangerous to health. Avoid tobacco completely.
- Students who are guilty of

  (i) rude language towards the staff of the College or Hostels;

(ii) assault or attempt to assault staff or fellow students of the College or Hostels will be expelled from the institution.

- If a College professor or a lecturer by speech or otherwise seeks to mislead his / her students into activities deemed objectionable, he / she is to be punished for dereliction of duty.



## கல்லூரி நடைமுறை விதிகள்

**அ) வகுப்பு நேரம் :**

- ஒரு பருவத்திற்கு 90 நாட்கள் வேலை நாட்களாகும் (பல்கலைக்கழக தேர்வு நடைபெறும் நாட்கள் தவிர). கல்லூரி வகுப்புகள் காலை 8.30 மணியிலிருந்து மதியம் 2.00 மணி வரை நடைபெறும்.
- வகுப்பு தொடங்கும் ஐந்து நிமிடங்களுக்கு முன்னதாக மணியடிக்கப்படும். இரண்டாவது மணியடிக்கப்படும் போது வகுப்புகள் தொடங்கப்படும். ஒவ்வொரு வகுப்பு முடிவிலும் மணியடிக்கப்படும். தினந்தோறும் காலையில் இறைவணக்கத்துடன் வகுப்புகள் தொடங்கப்படும்.
- முதல் எச்சரிக்கை மணி அடித்தவுடன், பேராசிரியர்கள் வகுப்பிற்கு வருவதற்கு முன்பாகவே மாணவர்கள் வகுப்பிற்குள் சென்று, தங்களுக்கான இருக்கையில் அமர வேண்டும். வகுப்பிற்கு வெளியிலோ அல்லது நடைபாதையிலோ மாணவர்கள் குழுவாக நின்று பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.
- வகுப்பு தொடங்கியபின் உரிய பேராசிரியர் வராவிடில் வகுப்புத் தலைவன், துறைத் தலைவரிடம் சென்று விசாரிக்க வேண்டும். பேராசிரியர் விடுப்பு எடுத்திருப்பின் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும். ஆசிரியர் வரும் வரை மாணவர்கள் வகுப்பறையை விட்டுச் செல்லாமல் அமைதிகாத்தல் அவசியம்.
- பாட நேரம் முடிந்தவுடன் தண்ணீர் குடிக்கவோ, ஓய்வறைக்குச் செல்வதோ முறையல்ல. அவசர தேவை ஏற்படின் விரைவாக செயல்பட வேண்டும்.
- எந்த பாடமும் இல்லாத நேரங்களில் மாணவர்கள் நூலகத்திற்குச் சென்று பயன் பெறவும்.

**ஆ) நன்னடத்தை விதிகள் :**

- அனைத்து மாணவர்களும் காலை 8.20 மணியளவில் கல்லூரிக்குள் இருப்பது அவசியம். தினமும் தொடர்ந்து காலதாமதமாக கல்லூரிக்கு வரும் மாணவன்/ மாணவி வீட்டிற்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள். அவர்கள் தங்களது பெற்றோரை உடன் அழைத்து வந்து காலதாமதத்திற்கான காரணத்தைக் கல்லூரி முதல்வர் அல்லது துணை முதல்வரிடம் தெரிவிக்க வேண்டும். வெகு தொலைவிலிருந்து

கல்லூரிக்கு வரும் மாணவர்கள் சற்று முன்னதாகவே புறப்பட்டு சரியான நேரத்தில் கல்லூரிக்கு வருவது அவசியமாகும்.

- கைபேசி, சிகரெட் மற்றும் போதைப் பொருட்கள் முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. கல்லூரி வளாகம் கைபேசி மற்றும் புகையிலை இல்லாப் பகுதியாகும்.
- மாணவர்கள் வகுப்பறையினுள் அமைதிகாத்தல் அவசியம். ஒரு வகுப்பறையிலிருந்து அடுத்து அறைக்குச் செல்லும் போது விரைவாகவும், வரிசையாகவும் செல்ல வேண்டும்.
- ராகிங் என்பது கடுமையான குற்றமாகும். ராகிங் செய்ய முற்படுபவர்கள் கல்லூரியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

**இ) மாணவர்கள் உடை :**

- அனைத்து மாணவர்களும் நன்கு உடையணிந்து வர வேண்டும். மாண வடிவ கழுத்துடைய T - சர்ட் மற்றும் ஜீன்ஸ் அணிவது தடை செய்ய மாணவர்கள் காதணி மற்றும் கையில் பேண்ட் எதுவும் அணியக் கூடாது. மாணவர்கள் தலை மற்றும் முகத்தில் சீராக முடி வெட்டி வருவது அவசியம். மாணவியர் சுடிதார் அணிவது அவசியம்.



**ஈ) சான்றிதழ்கள் :**

- மாணவர்கள் தங்களுக்குத் தேவையான சான்றிதழ்களைப் பெற அதற்குரிய படிவத்தில் கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பித்த 48 மணி நேரத்திற்குப் பின்னரே சான்றிதழ் வழங்கப்படும்.
- விண்ணப்பத்துடன் சுயவிலாசமிட்ட, தபால் தலையுடன் கூடிய உறை இல்லாவிடில் சான்றிதழ்கள் அஞ்சலில் அனுப்பப்படமாட்டாது.

**உ) நல்ல பழக்க வழக்கங்கள் :**

- ஒவ்வொரு மாணவனும் வருகைப்பதிவு, நூலகம், கல்லூரிக் கட்டணம், பல்கலைக்கழகத் தேர்வு, பற்றிய நடைமுறை விதிகளைத் தெரிந்திருப்பது அவசியம். விடுதி மாணவர்கள் விடுதியின் விதிமுறைகளுக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டும்.
- மாணவர்கள் கல்லூரி வளாகத்திலோ அல்லது விடுதியிலோ புகைப்பிடித்தல் கூடாது. கல்லூரி சுவற்றில் கிறுக்குவதோ, வகுப்பறை மற்றும் நடைபாதையில் குப்பை போடுவதோ, தரையில் மையைத் தெளிப்பதோ கூடாது.
- வகுப்பு நேரங்களில் மாணவர்கள் நடைபாதையில் நிற்பதோ, நடப்பதோ கூடாது.
- மாணவர்கள் தங்களது மதிய உணவை வகுப்பறையினுள் அமர்ந்து சாப்பிடக் கூடாது. சிற்றுண்டிச் சாலைக்கு சென்று சாப்பிட வேண்டும்.
- பேராசியரோ அல்லது ஏனைய ஆசிரியர்களோ வகுப்பிற்குள் வரும் போதும், வகுப்பை விட்டுச் செல்லும் போதும், அனைத்து மாணவர்களும் எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டும்.
- பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது எந்த ஒரு மாணவனும் ஆசிரியரின் அனுமதியின்றி வகுப்பறையின் வெளியே வரக்கூடாது. அதே போல் பிற வகுப்பு மாணவன் ஆசிரியரின் அனுமதியின்றி வகுப்பறைக்குள் சென்று சக மாணவனைக் கூப்பிடக்கூடாது; பேசக்கூடாது.
- மாணவர்களின் மாறுபாடான செயல்கள் பேராசிரியர்கள் மற்றும் நிர்வாகத்தால் சுமுகமான முறையில் தீர்க்கப்படும். எல்லா புகார்களும், வேண்டுகோள்களும் துறைத்

தலைவரின் ஆலோசனையின் பேரில் பரிசீலிக்கப்படும். நேரடியாக உயர் நிர்வாகப் பொறுப்பிலிருப்பவர்களிடம் எடுத்து செல்லபடக்கூடாது. எல்லா மேல் முறையீடுகளும் கல்லூரி தாளாளரிடமே செய்யப்பட வேண்டும்.

- கல்லூரிச் சொத்துக்களையும், மேசை, நாற்காலிகளையும் கவனமுடன் கையாள்வது அவசியம். அவற்றிற்குச் சேதம் ஏற்படுத்துபவர்கள் சேதத்திற்கான தொகையைச் செலுத்த வேண்டும். கல்லூரி சொத்துக்களையும் உடைமைகளையும் திருடுவது தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகும், இதனை மீறுபவர்கள் உடனடியாக தண்டிக்கப்படுவர்.
- மாணவர்கள் வகுப்பறையை விட்டுச் செல்லும் போது மின் விளக்கு மற்றும் மின்விசிறியை அனைத்துவிட்டுச் செல்லுதல் வேண்டும்.

**ஊ) நல்லொழுக்க விதிமுறைகள் :**



**(தமிழ்நாடு கல்வித்துறை விதிமுறை (1973) எண். 93 – 98 - களின்படி)**

- மாணவர்கள் தங்களுக்கென்று ஒரு குழுவோ அல்லது ஏதாவது சந்திப்பு நிகழ்ச்சிகளையோ, கல்லூரி முதல்வரின் அனுமதியின்றி கல்லூரி வளாகத்திற்குள் ஏற்பாடு செய்து அது சம்மந்தமாக ஏதும் பணம் வசூல் செய்யக் கூடாது.
- நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு தீர்ப்பிடப்பட்ட எந்த ஒரு மாணவனும் தனது படிப்பை இக்கல்லூரியில் தொடர முடியாது.
- கல்லூரி வளாகத்திலோ, விடுதியிலோ, மாணவர்கள் அரசியல் கட்சிகளை ஆதரிப்பவர்களாகவோ, சக மாணவர்களை கட்சிகளுக்கு உட்படுத்துபவர்களாகவோ இருப்பின் விடுதி மற்றும் கல்லூரியிலிருந்து நீக்கப்படுவர்.
- மாணவர்கள் கட்சி சம்பந்தப்பட்டக் கூட்டங்களிலோ, மத, சாதி பிரச்சாரக் கூட்டங்களிலோ, பங்கேற்கக் கூடாது.
- மாணவன் தவறான நடத்தையினாலோ, விதிமுறைகளுக்குக் கீழ்படியாதவனாகவோ இருந்தால், தமிழ்நாடு அரசின் கல்விக் கொள்கை (1978) – ன் படி தண்டனை விதிக்கவோ, சான்றிதழை நிறுத்திவைக்கவோ, தண்டனைக்குரிய மாணவனை கல்லூரியிலிருந்து தற்காலிகமாகவோ/நிரந்தரமாகவோ நீக்க, கல்லூரி முதல்வருக்கு முழு அதிகாரம் உண்டு.
- கல்லூரி வளாகத்திலோ அல்லது விடுதியிலோ, கல்லூரியின் அமைதியைக் குலைத்தல், ஒழுக்கக்கேடான செயல்பாடுகளில் ஈடுபடுதல், கல்லூரியின் அன்றாடப் பணிகளுக்கு இடையூறு செய்யும் மாணவர்கள் இவ்விதிமுறைகளின்படி தண்டனைக்குரியவர்கள் ஆவர்.
- ராகிங் என்பது தண்டனைக்குரிய குற்றமாகும். ராகிங் செய்ய முற்படுபவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவர்.
- புகையிலை சம்பந்தப்பட்ட எந்த ஒரு பொருளும் உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும். புகையிலையை முற்றிலும் தவிர்க்கவும்.
- மாணவர்கள் கல்லூரி அல்லது விடுதியில், ஆசிரியர்களை தவறான வார்த்தைகளால் பேசுவதோ, அடிக்க முற்படுவதோ தண்டனைக்குரியது. அம்மாணவர்கள் கல்லூரி மற்றும் விடுதியிலிருந்து நீக்கப்படுவர்.
- தனது பேச்சினாலோ, நடவடிக்கையினாலோ மாணவர்களைத் தவறான பாதைக்கு வழிகாட்டும் கல்லூரி ஆசிரியர்களின் செயல்பாடுகளும் கண்டிக்கத்தக்கதாகும்.